**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஐப்பசித் திங்கள் 10–ம் நாள்
2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை
*******

**இடைமனு விண்ணப்ப எண். 08/2025–ல்**
**நிறைவேற்று மனு எண். 112/2018–ல்**
**OS.No.31/2006**

சஸ்மன்னிசா மற்றும் பலர் .....மனுதாரர்/ எதிர்மனுதாரர்

**...எதிர்...**

ஹாஜி முகமது அலி ......எதிர்மனுதாரர்/ மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 14.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B. ரங்கராஜு அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

நிறைவேற்று மனு எண்.112/2018–ல் மனுதாரர் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–21, விதி–106–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.27 19:21:29 +0530

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் நிறைவேற்று மனுவில் 8ம் எதிர்மனுதாரர் ஆவார். இந்த மனுவின் எதிர்மனுதாரர்/மனுதாரர், மனுதாரர்/எதிர்மனுதாரர் மீது நிறைவேற்று மனு தாக்கல் செய்து அம்மனுவில் 8,9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டு இருந்தது. கடந்த சில மாதங்களாக மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்துள்ளார். மனுதாரருக்கு தற்போது உடல்நலம் குணமாகி அவர் வழக்கறிஞரை தொடர்பு கொண்ட போது மனுதாரர் ஆஜராகாததால் நிறைவேற்று மனுவில் எக்ஸ்பார்ட்டி உத்தரவு ஏற்பட்டு டெலிவரிக்கு போடப்பட்டுள்ளதாக அறிந்து கொண்டுள்ளார்.

(ii) மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்கவில்லை. உடல்நிலை பாதிக்கப்பட்டு இருந்ததால் இந்த தகவலை மனுதாரரால் அவரது வழக்கறிஞருக்கு தெரிவிக்க இயலவில்லை. எனவே நிறைவேற்று மனு எண்.112/2018-ல் அனைத்து மனுதாரர்கள் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர்/ மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்**

(2.1) இந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதியால் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மேற்படி அசல் வழக்கு எண் 31/2006 நம்பரில் தொடர்ந்த வழக்கில் மேற்படி நீதிமன்றம் மேற்படி வழக்கில் வாதியின் ஆவணங்களையும் சாட்சியத்தையும் பரிசிலனை செய்து அதன் அடிப்படையில் தாவா சொத்தில் பிரதிவாதிகள் கட்டியுள்ள கட்டுமானங்களை 22-09-2017-லிருந்து 2- மாத காலத்திற்குள் அகற்ற வேண்டும் என்று செயல் உறுத்து கட்டளை உத்தரவு வழங்கி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை 22-09-2017-ல் வழங்கியுள்ளது. மேற்படி சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு 31/2006 நம்பரில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை அடிப்படையில்

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.27 19:21:36 +0530

தான் இந்த நிறைவேற்று மனுவை இந்த எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிறைவேற்று மனுவை நிறைவேற்றம் செய்ய சட்டப்படி வாதியால் இயலும்.

(2.2) மேற்படி சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 31/2006 நம்பரில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் பேரில் இந்த மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எவ்வித மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை. எனவே சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 31/2006 நம்பரில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இறுதியானதாகும். இந்த மனுவில் கண்ட குறுந்தலைப்பு, நெடுந்தலைப்பு சரியல்ல. இந்த மனுவை மனுதாரர் யார் யார்க்கு போட்டுள்ளார் என்று அபிடவிட் மனுவில் தெளிவாக கூறவில்லை. மனுதாரர் அபிடவிட் மற்றும் மனுவில் கூறியுள்ள காரணங்கள் சரியல்ல. அதனை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

(2.3) சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 31/2006 நம்பரில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் கண்ட சொத்து விபரத்திற்கு தான் இந்த நிறைவேற்று மனு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்று மனுவில் கண்ட சொத்து விபரத்தின் படி மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்றம் செய்ய இயலும். சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 31/2006 நம்பரில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் கண்ட பிரதிவாதிகளான இந்த நிறைவேற்று மனுவில் கண்ட எதிர்மனுதாரர்களுக்கு சமூகம் கோர்ட்டால் உரிய நோட்டிஸ் அனுப்ப பட்டுள்ளது.

(2.4) நிறைவேற்று மனு சொத்தை கோர்ட் உத்தரவு படி சமூகம் கோர்ட் அமீனா பார்வையிட்டு அவர் Police Help, VAO Help, Break open, JCP Help, E.B Disconnect மனுக்கள் தேவை என்று கூறியதால் மேற்படி மனுக்களை வாதி தாக்கல் செய்து அந்த மனுக்கள் சமூகம் கோர்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.27 19:21:43 +0530

(2.5) சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 31/2006 நம்பரில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் பேரில் பிரதிவாதிகள் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யவோ அல்லது மேற்படி அசல் வழக்கு எண் 31/2006 தீர்ப்பின் மேல்முறையீடு செய்ய வேண்டுமே தவிர நிறைவேற்று மனுவில் எவ்வித கட்சியும் செய்ய இயலாது. இந்த நிறைவேற்று மனுவில் பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக உள்ளதை ரத்து செய்ய இயலாது. எனவே மேற்கண்ட காரனங்கள் அடிபடையில் இந்த மனுவை வாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**3. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**</u>

(i). மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>**5. தீர்வு:**</u>

**இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

(I) மனுதாரர்/8ம் எதிர்மனுதாரர் தரப்பில் அனைத்து எதிர்மனுதாரர்களுக்கு எதிராகவும் ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு எதிர்மனுதாரரும் எந்தெந்த தேதிகளில் ஒருதலைப்பட்சம் ஆனார்கள் என்ற விபரம் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை. மேலும் இந்த மனுவின் மனுதாரர் மற்றும் நிறைவேற்று மனுவின் 9ம் எதிர்மனுதாரர் நிறைவேற்று மனுவில் ஒருதலைப்பட்சம் ஆக்கப்படவில்லை. கடந்த 29.01.2025 அன்று மனுதாரர் மற்றும் நிறைவேற்று மனுவின் 9ம் எதிர்மனுதாரர் ஆகிய இருவரும் வழக்கு விசாரணைக்காக ஆஜராகாத காரணத்தால் அவர்கள் தரப்பு விசாரணை கேட்கப்பட்டதாக

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.27 19:21:49 +0530

நீதிமன்றத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு உரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) அன்றைய உத்தரவில் எந்த இடத்திலும் மனுதாரர் மற்றும் நிறைவேற்று மனுவின் 9ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. எனவே ஒருதலைப்பட்ச உத்தரவே பிறப்பிக்காத நிலையில் மனுதாரரால் ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரும் மனுவை தாக்கல் செய்ய இயலாது. மேலும் மற்ற எதிர்மனுதாரர்கள் எந்தெந்த தேதிகளில் ஒருதலைப்பட்சம் ஆனார்கள் என்ற விபரம் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை. அவ்வாறு தெரிவித்தால்தான் இந்த மனுவானது உ.ந.மு.ச ஆர்டர் 21 ரூல் 106ன் கீழாக பரிசீலனை செய்ய இயலும். மேலும் ஒருதலைப்பட்ச உத்தரவு மனுதாரர் /8ம் எதிர்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்காத நிலையில் மற்ற எதிர்மனுதாரர்களுக்காக ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரும் மனுவை தாக்கல் செய்ய இயலாது.

(iii) இத்தகைய சூழ்நிலையில் இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியில்,** இந்த மனுவானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.27 19:21:57 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>பின் இணைப்பு</u>**

<u>மனுதாரர்  தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –
<u>மனுதாரர்  தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை –
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –
<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை –

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.27 19:22:02 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு விண்ணப்ப எண். 8/2025–ல்
நிறைவேற்று மனு எண். 112/2018–ல்
OS.No.31/2006
நாள்–27.10.2025.